## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு நவம்பர்திங்கள் 21–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகைத்திங்கள் 05–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.120/2019 –ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண்.05/2025**
**வழக்கிடை விண்ணப்ப எண்.06/2025**

**01. தங்கராஜ்**
**02. கன்னியம்மாள்**
**03. கார்த்தி**
**04. கலாராணி** .. **மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

**–எதிர்–**

**பாசுமதி** **...எதிர்மனுதாரர்/வாதி**

இவ் விரு மனுக்களும் 21.11.2025-ஆம் நாள் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.A.S.அன்பு** அவர்களும் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திருM.தியாகராஜன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

கூடுதல் வாதுரை தாக்கல்செய்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்பு சட்டத்தின் 08-ஆம் வகுமுறையின் 09-ஆம் விதியின்கீழான விண்ணப்பத்தையும் அதை தாக்கல்செய்வதற்காக 31.07.2025-ஆம் தேதியன்று தீர்ப்புரை வழங்கும் நிலையில் உள்ள வழக்கை மீண்டும் திறக்கக் கோரியும் இவ்விரு மனுக்களும் உரிமையியல் நடைமுறைத் தொகுப்பு சட்டத்தின் 151-ஆம் பிரிவின் கீழும் 08-ஆம் வகுமுறையின் 09-ஆம் விதியின்கீழும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

III rd ADJ Court, Salem

**மனுக்களின் சுருக்கம்**

01. மனுதாரர்கள் முதலேற்பு வழக்கில் பிரதிவாதிகள் ஆவர். எதிர்மனுதாரர்/வாதி பாகப்பிரிவினை கோரியும் இதர நிவாரணங்கள் கோரியும் முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளார். முதலேற்பு வழக்கில் தீர்ப்பு வழங்குவதற்காக வழக்கு 31.07.2025-ஆம் தேதியன்று ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

02. முதலேற்பு வழக்குக் காலவரம்பால் தடைசெய்யப்பட்டுள்ளது. இதுச் சம்மந்தமான சங்கதிகளை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்-வழக்குரையில் சொல்லியுள்ளனர். ஆனால், அதற்கான அடிப்படையை குறிப்பாக சொல்லவில்லை. ஆகையால். காலவரம்புத் தடை சம்மந்தமாக கூடுதல் வாதுரை மூலம் விளக்கமாக சொல்ல வேண்டியுள்ளது. ஆகையால், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய அனுமதி வழங்க வேண்டும். அதற்காக தீர்ப்புக்காக உள்ள வழக்கை மீண்டும் திறக்க ஆணையிட வேண்டும்.

**எதிருரைகளின் சுருக்கம்**

03. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனுவிலேயே எதிர்வழக்குரையின் காலவரம்பீட்டுத்தடை சம்மந்தமாக சொல்லியுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். அவ்வாறு இருக்க ஏற்கனவே சொன்ன சங்கதியை மீண்டும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. வழக்கு தீர்ப்பு வழங்குவதற்காக உள்ள நிலையில் வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் எவ்வித காரணமுமின்றி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்த மனுக்களை தாக்கல்செய்துள்ளனர். மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் இந்த

III rd ADJ Court, Salem

மனுக்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை தவறாக பயன்படுத்தும் செயலாகும். மற்றும் வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்தும் செயலாகும். ஆகையால் இவ்விரு மனுக்களையும் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

### தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

04. **இம்மனு அனுமதிக்கத்தக்கதா?**

### தீர்முடிவு

**05.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. எதிர்வழக்குரையுடன் எதிர்க்கட்டு கோரிக்கையோ எதிர் கோருரிமையோ முன்வைக்கப்படாத நிலையில் எதிர்வழக்குரை தாக்கல்செய்யப்பட்டபின் தரப்பினர்கள் உரிமையுடன் வாதுரை எதையும் தாக்கல்செய்ய முடியாது என்றும் அவ்வாறு அவ்வாறு தாக்கல்செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் வலியுறுத்தினாலோ அல்லது அவ்வாறு தாக்கல்செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கினாலோ மட்டும்தான் கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய முடியும் என்றும் உரிமையியல் நடைமுறைத் தொகுப்பு சட்டத்தின் 08-ஆம் வகுமுறையின் 09-ஆம் விதி வகுத்துரைக் - கிறது.

**06.** இந்த வழக்கில் இரு தரப்பு சாட்சியமும் முடிக்கப்பட்டு இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்கில் தீர்ப்பு வழங்குவதற்கா வழக்கு ஒத்தி- வைக்கப்பட்டிருருந்த நிலையில் இவ்விரு மனுக்களும் தாக்கல்செய்யப் பட்டுள்ளன. கூடுதல் வாதுரை தாக்கல்செய்ய வழக்கின் இறுதிநிலையில் அனுமதி கோருவது ஏற்புடையதாக இல்லை. தரப்பினர்கள் கூடுதல்



III rd ADJ Court, Salem

வாதுரை தாக்கல்செய்வதன் மூலம் எற்கனவே எதிர்தரப்பினரிடம் சேர்ந்து அடைந்து இருக்கும் வாத உரிமை அல்லது எதிர்வாத உரிமையை(vested defence) பறிக்க முடியாது. தற்போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்ய முற்படும் கூடுதல் வாதுரையை அனுமதித்தால் அது ஏற்கனவே எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடம் சேர்ந்தடைந்துள்ள வாத உரிமையை பறிப்பதாக அமையும். மேற்சொன்ன இரு காரணங்களினால் இவ்விரு மனுக்களையும் அனுமதிப்பதற்கான முகாந்திரம் இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

## இறுதிமுடிவு

07. இறுதியாக, இவ்விரு மனுக்களும் தள்ளுபடிச் செய்யப்-படுகின்றன.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு நவம்பர்திங்கள் 21–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்)வே.புகழேந்தி**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட /அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

III rd ADJ Court, Salem